## தொடர் மற்றும் முழுமையான கற்றல் முறையில் நெல் விளையும் வயல் நிலத்தை பார்வையிடுதல்.





செங்கல் சூளையில் செங்கல் தயாரிக்கும் முறையை பார்வையிடுதல்





கொடைக்கானல் மலையில் காணப்படும் இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் குறித்த பாடங்களை ஆசிரியர் திரு.ஐசக் அவர்கள் மாணவர்களுக்கு விளக்கப்படுத்துகின்றார்.

SPECIAL OLYMPICS WORLD GAMES ABU DHABI 2019
الأولمبياد الخاص الألعاب العالمية أبوظبي 2019

## சர்வதேச கோடைகால சிறப்பு ஒலிம்பிக் போட்டிகள்

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அபுதாபியில் நடைபெறவுள்ள சிறப்பு ஒலிம்பிக் போட்டிக்கு நமது பள்ளியிலிருந்து 6 விளையாட்டு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.



E. திவ்ய பாரதி
இறகு பந்து
( Badminton )



M. ஜெயஸ்ரீ
சைக்கிள்
( Cycle Race )



C. சந்தியா தேவி
தடகளம்
( Athletic )



D. மனோஜ் குமார்
கூடை பந்து
( Basket Ball )



T. சித்தார்த்தன்
சைக்கிள்
( Cycle Race )



B. தினேஷ்
சைக்கிள்
( Cycle Race )





## பெத்சான் சிறப்பு பள்ளி

( அறிவுத்திறன் குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கானது )
தமிழக அரசின் அங்கீகாரம் பெற்றது & மத்திய அரசின் பதிவு பெற்றது
828, சிக்கந்தர் சாவடி, மதுரை - 625 018.
Phone : 0452 - 2 660 770 ; 98949 28666 ; 9894476662
E-mail : bethshanschool@gmail.com
F : www.facebook/bethshanschool




# நிகழ்வுகள்

BETHSHAN
SPECIAL SCHOOL

*பேரன்புடையீர்,*

எல்லாம் வல்ல இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பெத்சான் சிறப்பு பள்ளியின் வாழ்த்துக்கள்.

பெத்சான் சிறப்பு பள்ளியானது கடந்த 23 ஆண்டுகளாக உங்களின் பேராதரவுடன் அறிவுத்திறன் குறைந்த மாற்றுதத்திறனாளிகளுக்கு பல்வேறு சேவைகளை சிறப்பாக செய்துவருகிறது. கடந்த 2018 ஆம் ஆண்டு பள்ளியில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளை ஆண்டறிக்கையாக தொகுத்து உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

நீங்கள் இந்தக் குழந்தைகளின் வாழ்விற்காக செய்துவரும் ஒவ்வொரு உதவிகளையும் கடவுள் நிச்சயம் அங்கீகரித்து அதற்குரிய பலன்களை தந்து உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் ஆசிர்வதிப்பார்.

நன்றி.

சமூக பணியில்,

R.ரவிக்குமார்
முதல்வர்




2018
ஆண்டு அறிக்கை

## சிறப்பு ஒலிம்பிக் செய்திகள்



8 வயதிற்குட்பட்ட அறிவுத்திறன் குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கு ( Young Athlete Program - YAP ) மதுரை மாவட்ட அளவிலான திறனாய்வு முகாமானது 2018, ஜூன் 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இம்முகாமினை சிறப்பு ஒலிம்பிக் பாரத், பெத்சான் சிறப்பு பள்ளி மற்றும் இந்திராகாந்தி திறந்த நிலைப் பல்கலைக்கழகமும் இணைந்து பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தியது. இதில் மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து சிறப்பு பள்ளிகள் மற்றும் அனைவருக்கும் கல்வி இயக்கத்தில் உள்ள சிறார்கள் உட்பட 86 பேர்கள் கலந்து கொண்டனர். இம் முகாமில் கலந்து கொண்டவர்களை நொய்டாவில் உள்ள அமிட்டி பல்கலைக்கழக ஆராய்ச்சி குழுவினர் திறனாய்வு செய்தனர்.

சிறப்பு ஒலிம்பிக் போட்டிகள் பற்றியதான சமுதாய பயிற்சி வகுப்புகள் ( Community Level Coaches Training ) நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் சிறப்பு கல்வியாசிரியர்கள், இதர பயிற்சியாளர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட 75 பேர்கள் கலந்து கொண்டனர்.



### புளோர் ஹாக்கி & புளோர் பால் போட்டிக்கு தமிழக அணி தேர்வு



தேசிய அளவில் நடைபெறும் புளோர் ஹாக்கி மற்றும் புளோர் பால் விளையாட்டு போட்டிகளுக்கு தமிழக அணியின் சார்பில் விளையாடுவதற்கு வீரர்களை தேர்வு செய்யும் நிகழ்ச்சியானது மதுரை வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் நடைபெற்றது. புளோர் ஹாக்கி போட்டிகளை கல்லூரியின் முதல்வர் முனைவர் S.ராமமூர்த்தி அவர்களும், புளோர் பால் போட்டிகளை விருட்ஷம் சமூக சேவை அறக்கட்டளையின் தலைவர் பேராசிரியர்.T.குமார் அவர்களும் துவக்கி வைத்தார்கள். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டார்கள். நமது பள்ளி மாணவர்கள் 7 பேர் தேசியப் போட்டிக்கு தேர்வாயினர்.

தேசிய அளவில் நடைபெற்ற சிறப்பு ஒலிம்பிக் புளோர் ஹாக்கி போட்டியில் தமிழக அணி வெண்கலப் பதக்கம் வென்றது. தமிழக அணியில் விளையாடி வெற்றி பெற்ற நமது பள்ளி மாணவர்களை மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.S.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் பாராட்டினார்கள். உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பிரம்மநாயகம் அவர்கள்.








### உலக மனநல நாள்

10 அக்டோபர், 2018

கருப்பொருள்

Be A Friend

உலக மனநல நாளன்று நமது பள்ளியும், ஜே.ஸி.ரெஸிடென்ஸி ஹோட்டலும் இணைந்து மாவட்ட அளவிலான போட்டிகளை ஒவ்வொரு வருடமும் நடத்தி வருகின்றது. இப்போட்டிகளில் மதுரை மாவட்டத்திலுள்ள 19 சிறப்பு பள்ளிகளை சார்ந்த 114 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். இவ்வருட கருப்பொருளை ரோட்டரி சங்க ஆளுநர் **திரு.M.S.கண்ணன்** அவர்கள், வெளியிட்டார்கள். அதன் முதல் பிரதியை மதுரை ரவுன்டு டேபிள் - 14 சங்க தலைவர் **திரு.மதன்**, அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். உடன் ஜே.ஸி.ரெஸிடென்ஸி இயக்குநர் **திரு.J.ரிஷ்வந்த்** மற்றும் மதுரை, நெக்ஸ்டு ஜென் ரோட்டரி சங்க தலைவர் **திரு.விக்னேஷ்** அவர்கள் உள்ளனர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், கலந்து கொண்ட அனைத்து சிறப்புக் குழந்தைகளுக்கும் மதுரை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் **திரு.K.B.பிரம்மநாயகம்** மற்றும் லேடி டோக் கல்லூரியின் சமூக அறிவியல் துறைத் தலைவர் Dr.**கரோலின் நேசபாய்** அவர்களும் இணைந்து பாராட்டுச் சான்றிதழும், பரிசுகளும் வழங்கி கௌரவித்தார்கள்.




## சிறந்த பணியாளருக்கான மாநில விருது

G. நர்மதா

அறிவுத்திறன் குறைந்த சிறந்த பணியாளருக்கான தமிழக அரசின் மாநில அளவிலான 2016 ஆம் ஆண்டிற்கான விருதினை நமது பள்ளியில் பயின்று தற்போது சி.எஸ்.ஐ.ஜெயராஜ் அன்னபாக்கியம் செவிலியர் கல்லூரியில் நூலக உதவியாளராக பணிசெய்து வரும் G. நர்மதா பெற்றுள்ளார் என்பதை பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## சிறப்பு பணியாளர் பணிநியமன விழா







நமது பள்ளியில் சிறப்பு கல்வி முடித்த 5 அறிவுத்திறன் குறைந்த மாற்றுத்திறனாளிகள் மதுரை, ஜே.ஸி.ரெஸிடென்ஸி ஹோட்டலில் பணிநியமனம் செய்யப்பட்டனர். இவர்களுக்கான பணிநியமன உத்தரவை ஜே.ஸி.ரெஸிடென்ஸியின் செயல் இயக்குனர் திரு.ரிஷ்வந்த் ஜெயபால் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர். மாண்புமிகு.M.V.முரளிதரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு பணியாளருக்கான பணிநியமன ஆணையை வழங்கி வாழ்த்துரை வழங்கினார்கள். உடன் மதுரை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், திரு.பிரம்மநாயகம், சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் செவிலியர் கல்லூரி முதல்வர் Dr.ஜோதி சோபியா, மேக்ஸ் பிராப்பர்ட்டீஸ் நிர்வாக இயக்குநர் Er.K.இளங்கோ பாக்யராஜ், சிவகாசி மிஸ்பா டிரேடர்ஸ் நிர்வாக இயக்குனர் திரு.பால், அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்க செயலாளர் திரு.K.சாமிதுரை ஆகியோர்கள் கலந்து கொண்டு பணிநியமனம் பெற்ற சிறப்பு பணியாளர்களை வாழ்த்தினார்கள்.

நமது பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர் தினவிழாவில் மதுரை மேற்கு தாசில்தார் **திரு.S.பாலாஜி**. அவர்கள் ஆசிரியர்களின் சேவையை பாராட்டினார்கள். உடன் டாக்டர்.A.P.J.அப்துல்கலாம் நண்பர்கள் குழு சமூக அறக்கட்டளையின் நிறுவனர் **திரு.A.செந்தில்குமார்** மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் உள்ளனர்.





நமது பள்ளியில் நடைபெற்ற 68 வது சுதந்திர தினவிழாவின்போது மதுரை மீனாட்சி ரோட்டரி சங்கத் தலைவர் **திரு.நாகராஜன்** அவர்கள் தேசிய கொடியை ஏற்றி, வாழ்த்துரை வழங்கினார்கள். உடன் சங்க செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு இனிப்பு வழங்கினார்கள்.